செய்தி வெளியீடு எண்: 794 நாள்: 24.9.08

# செய்தி வெளியீடு

## புழல் தணிக்கைச் சாவடியில் நவீன கண்காணிப்பு கேமராவை மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.எஸ்.என்.எம்.உபயதுல்லா அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.எஸ்.என்.எம். உபயதுல்லா அவர்கள் இன்று (24.9.2008) நவீனமயமாக்கப்பட்டுள்ள புழல் தணிக்கைச் சாவடியை பார்வையிட்டு, அங்கு பொருத்தப்பட்டுள்ள அதிநவீன கண்காணிப்புக் கேமராவை இயக்கி வைத்தார்.

வணிகவரித்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் வணிகவரித் துறையில் உள்ள 29 தணிக்கைச் சாவடிகளை நவீனமயாமாக்குதலுக்கு 2008-ம் ஆண்டு ரூ.87 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது. அதன்படி புழல் தணிக்கைச் சாவடி நவீனமயமாக்கப்பட்டு, அதிநவீன தொலைநோக்கு கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது. இத்தணிக்கைச் சாவடியில் தமிழ்நாட்டிலிருந்து வெளிமாநிலங்களுக்குச் செல்லும் சரக்கு வாகனங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன. தற்பொழுது இந்த நவீன கேமரா வழியாக சரக்கு வாகனங்கள் விடுபடாமல், தணிக்கை செய்வதற்கும், தணிக்கைச் சாவடியில்

நிற்காமல் செல்லும் வாகனங்களைக் கண்காணிக்கவும் வழிவகுக்கும். உயர் அலுவலர்கள் தங்கள் அலுவலகத்திலிருந்தே தங்கள் கணினியில் புழல் தணிக்கைச் சாவடி வழியாக செல்லும் வாகனப்போக்குவரத்தையும், தணிக்கைச் சாவடியின் பணிகளையும் கண்காணிக்கலாம்.

இந்த நவீன கேமராவின் இயக்கத்தை மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா அவர்கள் இன்று புழல் தணிக்கைச் சாவடியில் தொடங்கிவைத்தார். இந்த நிகழ்ச்சியில் வணிகவரி ஆணையர் திரு.த. ஜேக்கப், கூடுதல் ஆணையர்கள் திரு. எஸ். முருகையா, திரு. ப.ஜயப்பன், திரு. ஆர்.சந்திரகாந்தன் மற்றும் வணிகவரித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**